### கல்வி, வீடு, விளையாட்டு, மருத்துவ வசதிகள் உள்ளிட்டவற்றை

# மீனவர்களுக்கு வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப்.6 -

தமிழ்நாட்டில் உள்ள மீனவர் சமூகத்தினருக்கு சுனாமி / வெள்ள எதிர்ப்பு வீடுகளைக் கட்டி வழங்கு வதற்கான நலத்திட்டங்கள் ஒன்றிய அரசிடம் உள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மீனவர்களுக் கான பல் வேறு வீட்டுவசதி நலத் திட்டங்களின் கீழ் ஒதுக்கப் பட்ட / வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?



நாட்டில் உள்ள மீனவர் களுக்கு போதுமான வீட்டு வசதி கல்வி விளையாட்டு மற்றும் மருத்துவ உள்கட் டமைப்பு வசதிகளை வழங்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை? மேற்கூறிய கால கட்டத்தில் செய்யப்பட்ட மற்றும் வழங்கப் பட்ட ஒதுக்கீடுகளின் விவரங்கள் யாவை?

ஒன்றிய அரசின் மீன்வ ளம் கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் @ லாலன் சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு : -

அரசின் மீன்வளம் மற் றும் மீனவர் நலத்துறையிலி ருந்து பெறப்பட்ட தகவ லின்படி தமிழ்நாட்டில் உள்ள மீனவர் சமூகத்தின ருக்கு சுனாமி / வெள்ள எதிர்ப்பு வீடுகளை வழங்கு வதற்கான திட்டம் எதுவும் ஒன்றிய அரசிடம் இல்லை.

2020-21 முதல் 2024-25 வரையிலான காலகட்டத் தில் அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களிலும் மீன்வள மேம்பாட்டிற்காக ரூ.20,050 கோடி முதலீட் டில் பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) என்ற முதன்மைத் திட்டத்தைமீன்வளத்துறை கால்நடை பராமரிப்பு மற் றும் பால்வள அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. PMMSY மற்றவற்றுடன் மீன வர்கள் மற்றும் மீன் விவசா யிகளுக்கான பல நலன்புரித் தொடர்பான நடவடிக்கை களைக் கருதுகிறது.

(i) நிலையான மீன்பிடி நடைமுறைகள் மூலம் கட லோர மீனவர்களுக்கு பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை அதிக ரிக்கும் நோக்கத்துடன் கடல்சார் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் ஒருங்கிணைந்த நவீன கட லோர மீன்பிடி கிராம ங்களை உருவாக்குதல்.

(ii) விபத்து மரணம் அல் லது நிரந்தர மொத்த ஊனத்திற்கு எதிராக ரூ.5.00 லட்சம் காப்பீடு, விபத்து நிரந்தர பகுதி ஊனத்திற்கு ரூ.2.50 லட் சம் மற்றும் விபத்து மருத்து வமனையில் அனுமதிக்கப் படுவதற்கு ரூ.25,000 காப்பீடு

(iii) மீன்பிடி தடை / சிக் கன காலத்தில் மீன் வளங்க ளைப் பாதுகாப்பதற்காக சமூக - பொருளாதார ரீதி யாக பின்தங்கிய நிலையில் உள்ள பாரம்பரிய மீனவ குடும்பங்களுக்கு வாழ்வா தாரம் மற்றும் ஊட்டச் சத்து ஆதரவு.

இந்திய ஒன்றிய அரசின் கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் கிராமப்புறங்க ளில் "அனைவருக்கும் வீடு" என்ற நோக்கத்தை அடை வதற்காக அடிப்படை வச திகளுடன் தகுதியான கிரா மப்புற வீடுகளுக்கு உதவி வழங்குவதற்காக ஏப்ரல் 1 அன்று 2016 முதல் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா - கிராமின் (PMAY-G) ஐ செயல்படுத்துகிறது. இன் றைய நிலவரப்படி 4.95 கோடி வீடுகள் என்ற ஒட்டு மொத்த இலக்கில் 3.79 கோடி வீடுகள் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன. அவற்றில் 3.31 கோடி வீடுகள் அனும திக்கப்பட்டுள்ளன. மேலும் 2.69 கோடிக்கும் அதிகமான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 9,57,825 வீடுகள் கட்ட இலக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 7,48,742 வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன மேலும் 6,33,052 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

PMAY-G இன் கீழ் வடகி ழக்கு மாநிலங்கள் இமாச்ச லப் பிரதேசம் மற்றும் உத்த ரகண்ட் மலைப்பகுதி மாநி லங்கள் மற்றும் ஜம்மு & காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களில் பயனாளிகளுக்கு ரூ.1.20 லட்சம் நிதி உதவி வழங்கப் படுகிறது. இதனுடன் கூடு தலாக ஸ்வச் பாரத் மிஷன் - கிராமின் (SBM-G), மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட் டம் (MGNREGS) அல்லது வேறு ஏதேனும் அர்ப்ப ணிப்பு நிதி ஆதாரத்துடன் இணைந்து கழிப்பறைகள் கட்டுவதற்கு தலா ரூ.12 000 உதவியும் வழங்கப்படு கிறது. பல்வேறு அரசு திட் டங்களின் கீழ் குழாய் குடி நீர், மின்சார இணைப்பு, எல்பிஜி எரிவாயு இணைப்பு போன்றவற்றுக் கான ஒருங்கிணைப்பும் வழங்கப்படுகிறது. மேலும் PMAY-G இன் பெண் பய னாளிகள் சுய உதவிக் குழுக்களுடன் (SHGs) இணைக்கப்பட்டு வாழ்வா தாரம் மற்றும் வேலை வாய்ப்புகளை உறுதி செய் கின்றனர்.

மேலும் PMAY-G இன் கீழ் இலக்குகளில் ஐந்து சத வீதம் வரை சிறப்புத் திட் டங்க ளுக்கு ஒதுக்கப்பட் டுள்ளது. இதில் சுனாமி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை ஆபத்துகள் ஏற் பட்டால் வீடுகளை மறு வாழ்வு / இடமாற்றம் செய்வதற்காக மாநிலங்க ளுக்கு இலக்குகள் ஒதுக்கப் படுகின்றன. கடந்த 5 ஆண் டுகளில் PMAY -G இன் கீழ் தமிழ்நாட்டிற்கு வெளியி டப்பட்ட மத்திய பங்கு ரூ.3527.69 கோடி.

2015-16 முதல் 2019-20 வரை மீன்வளத் துறை, மீன்வளம் கால்நடை பரா மரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தால் செயல்ப டுத்தப்பட்ட 'நீலப் புரட்சி' என்ற மத்திய நிதியுதவி திட் டத்தின் கீழ் மீனவர்களுக்கு மொத்தம் 18,886 வீடுகள் அனுமதிக்கப்பட்டன. மேலும் தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்கள் மற் றும் யூனியன் பிரதேசங்க ளுக்கு மத்திய நிதி ரூ.104.69 கோடி விடுவிக்கப்பட்டது.

மேலும் தமிழக அரசு 2016-17 முதல் 2024-25 வரையிலான காலகட்டத் தில் மீனவர் கூட்டுறவு சங் கம் (FCS)/மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தில் (FWCS) உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்ட கடல் மற் றும் உள்நாட்டுத் துறை மீன வர்களுக்கு 5,000 வீடுகளை அனுமதித்து ரூ.98.28 கோடி ஒதுக்கீட்டில் நிர்வாக உத்த ரவுகளை பிறப்பித்துள்ளது. 5,000 வீடுகளில் 3,472 வீடு கள் கட்டுமானத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டு 3,386 வீடுகள் கட்டி முடிக் கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தடா தனசேகரன்

### பிப்ரவரி 6 (1992)



ஜெயலலிதா அரசின் "தடா" சட்டத்தைக் கண்டித்து சென்னையில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்டு உயிரிழந்தார் சென்னை 3வது வட்ட இளைஞர் அணியின் தம்பி தனசேகரன்.

"தம்பி! உன் தியாகம்; தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைத்து; தடா தர்பார் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கான முன்னுரையாக அமையட்டும்! எனக் கூறி; "அந்த ஆதிதிராவிட இனத்து அடலேறாம் தனசேகரனுக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக" என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஊன்றிய விதை

# திராவிட மாடல் ஆட்சியில் ஆலமரமாய் எழுச்சி கொள்ளும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்!

தமிழ் மொழியின் தொன்மை இன்னமும் புதுமையாக நீடித்து வருவதில் நம் சமூகத்தின் அறிவுப்பூர்வமான தொகுப்பு மரபுக்கு ஒரு முக்கியப்பங்களிப்பு உள்ளது. பாணர்கள் இயற்றிய சங்க கவிதைகள் பின்னர் தொகுக்கப்பட்டது முதல் 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே.சா, போன்ற முன்னோடிகளின் முயற்சிகளால் இன்றும் சங்கத்தமிழும் காப்பியங்களும் தமிழன் கைகளில் தவழ்கின்றன. இந்த மரபை நவீனமாக்க பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழி பெயர்த்தல் வேண்டும் – இறவாத பாரதி.

இந்த மரபின் தொடர்ச்சிதான் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மேற்கொண்டிருக்கும் முயற்சிகள். இலக்கு என்பது தமிழிலிருந்து உலகிற்கு, உலகிலிருந்து தமிழுக்கு என்ற அளவில் பணிகள் முனைப்பு பெற்றுள்ளன.

இந்த முயற்சிகளுக்கு உரமாக இருந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று சொல்வது மிகையல்ல. ஏனெனில் சிந்தனை, எழுத்து விமர்சனம், உரையாடல் என்ற மரபில் இருந்து வந்தவர் கலைஞர். அதுமட்டுமல்லாமல் ஈராயிரம் ஆண்டுகாலத் தமிழ் இலக்கியத்தை பயின்று நவீனப்படுத்துவதிலும் மக்கள் மயமாக்கத்திலும் சாதனையாளராக இருந்தவர்.

உயர்கல்வி நூல்கள் அந்தந்த மாநில மொழிகளில் வெளியிடப்பட வேண்டும் என்பதற்கேற்ப தமிழ்மொழியில் கல்லூரிக் கல்வி பயிலும் மாணாக்கர் வாசிப்புக்காக 1961 இல் முத்தமிழ் அறிஞர் கலைஞரால் தொடங்கப்பட்ட நிறுவனமே இன்று தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமாக வளர்ந்துள்ளது. 1980 ஆம் ஆண்டு தொடக்கம் வரை 875 உயர்கல்வி நூல்கள் வெளியிட்டுள்ளது. இவற்றில் சுமார் 700 நூல்கள் 1967 முதல் 1976 வரை வெளியாகின. இதில் முத்தாய்ப்பாக 1974 ஜனவரி 16 அன்று ஒரே நாளில் 166 நூல்கள் அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது.

இவ்வாறு நாற்பது ஆண்டுகளுக்கு முன் வெளியான இந்த அரிய நூல்களில் இருந்து இன்றும் யு.பி.எஸ்.சி தேர்வுகளுக்குக் கேள்விகள் கேட்கப்படுகின்றன என்பதிலிருந்து இவற்றின் முக்கியத்துவத்தை உணரலாம். சில பதிப்பகங்கள் இந்த நூல்களில் சிலவற்றைப் பதிப்பித்தாலும் மூல நூல்களுடன் ஒப்பிட்டுப் பதிப்பிக்கப்படவில்லை என்ற குறை இருந்து வந்தது.

இக் குறையை நீக்கும் வகையில் பாடநூல் நிறுவனத்தில் வெளியீட்டுப் பிரிவு 2017இல் தொடங்கப்பட்டது. இந்த நூல்களின் முதல் பதிப்புகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சேகரித்து, மின்னாக்கம் செய்து இணையத்தில் வெளியிடப்பட்டதுடன், ஆவணப்பதிப்பாகவும் மறு அச்சாகவும் பதிப்பிக்கப்படுகிறது. இக் கடும் பணியில் இதுவரை 635 நூல்கள் வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்த நூல்கள் தற்போது குடிமைப்பணி தேர்வர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்குப் பயன்படுவதால் அவை அனைத்தும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. வரும் காலங்களில் மேலும் 240 புத்தகங்கள் வெளியிடப்பட உள்ளன.

வெளியீட்டுப் பிரிவு தொடங்கியதில் இருந்து இதுவரை 1150 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த 42 மாதங்களில் மட்டும் 635 ஆவணப்பதிப்பு நூல்கள் 515புதிய புத்தகங்கள் வெளியாகியுள்ளன.

**திராவிட மாடல் ஆட்சியில் வெளியீட்டுப் பிரிவின் முக்கியத் திட்டங்கள்**

**முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் 105**

உயர்கல்வி பயிலும் தமிழ்நாடு மாணாக்கர்கள் கூடுதல் வாசிப்புக்காகவும் ஆய்வு மனப்பான்மையை உருவாக்கவும் போட்டித்தேர்வுகளுக்குத் தயார்படுத்தவும் மருத்துவம், பொறியியல், அறிவியல் & தொழில்நுட்பம் மனிதவியல் துறைகளில் தற்காலத்துக்கேற்ப உலகின் தலைசிறந்த எழுத்தாளர்கள் எழுதி உலகப் புகழ்பெற்ற பதிப்பகங்கள் வெளியிடும் புத்தகங்கள் ஆங்கிலத்தில் தமிழாக்கம் செய்து வெளியாகி உள்ளன.

கைடன் மற்றும் ஹால் மருத்துவ உடற்செயலியல் பாடநூல்Guyton & Hall Textbook of Medical Physiology Third South Asia Edition இதுவரை 105 நூல்கள் வெளியாகி உள்ளன. வரும் ஆண்டில் மேலும் 100 நூல்கள் வெளியாக உள்ளன.



**திண்டுக்கல் ஐ. லியோனி**
தலைவர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்.

**திசை தோறும் திராவிடம் 78**

ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தொன்மையும் தொடர்பும் கொண்ட தமிழ் மொழியில் வெளியாகும் சிறந்த இலக்கியங்களும் அரிய நூல்களும் திராவிடச் சிந்தனைகளின் பொக்கிஷங்கள் ஆகும். இந்த படைப்புகளை உலக அளவில் கொண்டு செல்லும் வகையில் சிறந்த தமிழ் நூல்களைத் தேர்வு செய்து ஆங்கிலம் மற்றும் பிற திராவிட மொழிகளில் மொழியாக்கம் செய்து வெளியிடப்படுகின்றன. இதுவரை 50 புத்தகங்கள் இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன.

**வ.உ.சி. 150 ஆவது பிறந்த ஆண்டு - தமிழக அரசு சிறப்புத் திட்டம்**

சுதந்திரப் போராட்ட வீரரும் தமிழறிஞருமான வ.உ.சிதம்பரனார் தன் வாழ்நாளில் கடும் போராட்டங்களுக்கு இடையிலும் எண்ணற்ற ஆய்வுநூல்களை எழுதியுள்ளதுடன் உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் இருந்துள்ளார். அவரது எழுத்துகள் அனைத்தும் அச்சேறாத நிலையில் அவரது 150 ஆவது பிறந்த நாளில் அவரது எழுத்துகள் அனைத்தும் திரட்டுகளாக வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் வ.உ.சி. எழுத்துகள் அனைத்தும் முதல் முறையாக நான்கு தொகுதிகளில் நூல் வடிவம் கண்டுள்ளது.

**இளந்தளிர் இலக்கியத் திட்டம் 138**

சிறார்கள் மனதை கதைகளாலும், வண்ணங்களாலும் அழகூட்டும் முயற்சியே இத்திட்டம். சிறார்களின் படைப்பூக்கத்தினையும், சமூகத் திறன்களையும் ஊக்கப்படுத்தும் முயற்சியாக சிறார்களுக்கான நூல்களை ஒரு கதை - ஒரு புத்தகம் என்ற அளவில் தமிழ்நாட்டின் தலைசிறந்த சிறார் படைப்பாளிகளைக் கொண்டு எழுதச் செய்து சிறந்த ஓவியர்களின் கலை வண்ணத்தில் அனைத்தும் வண்ணங்களாக வெளியிடப்படுகின்றன.

5-8, 9-11, 12-14 ஆகிய மூன்று வயதுப்பிரிவுகளாகப் பிரித்து அக்குழந்தைகளுக்குப் பொருத்தமான கதைகளும் ஓவியங்களும் தீட்டப்படுகின்றன. அறிந்ததில் இருந்து அறியாததை நோக்கி என்ற அடிப்படையில் கதைக்கருக்கள் உருவாக்கப்பட்டு பன்மையம், சமூக நீதி, சமத்துவம், சுற்றுச்சூழல் தூய்மை ஆகிய விழுமியங்களில் சரியான தகவல்கள் உறுதிப்படுத்தப்படுகிறது.

இதுவரை 138 சிறார் புத்தகங்கள் வெளியாகி உள்ளன. இன்னும் பல நூறு புத்தகங்கள் வெளியாக உள்ளன. குறிப்பாக, உலக கிளாசிக்ஸ் நாவல்களின் குழந்தைகளுக்கான தமிழ் பதிப்பு, மாங்கா காமிக்ஸ் போன்ற புகழ்பெற்ற சிறார் காமிக்ஸ் தமிழாக்கம், ஈரான், துருக்கி சிறார் கதைகள் தமிழாக்கம், 5 வயதுக்குக் கீழான மழலைகளுக்கான படப் புத்தகங்கள் இவற்றில் உள்ளடக்கம்.

**நாளைய தலைமுறைக்கு நாட்டுடைமை நூல்கள் 44**

தமிழின் தொன்மைச் சிறப்பு மிக்க இலக்கியங்களைப் போல தற்காலத்திலும் நவீன சிந்தனைகளை வெளிப்படுத்தும் சிந்தனையாளர்கள் உள்ளனர். இவர்களையும் இவர்களது படைப்புகளையும் சிறப்பிக்கும் வகையில் இவ்வகையில் பங்களிப்பு செய்யும் அளப்பரிய எழுத்தாளர்களின் படைப்புகளை நாட்டுடைமை ஆக்கும் திட்டம் இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது. இப் படைப்புகள் நாளைய தலைமுறைகளுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் நூல்கள் தேர்வு செய்யப்பட்டு மதிப்புக்கூட்டுதல் சேர்த்து மறு பதிப்பு செய்யப்படுகின்றன. இதுவரை 33 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் நூற்றுக்கும் அதிகமான படைப்புகள் வெளியிடப்பட உள்ளன.

**நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் நினைவுத்தடங்கள் 6**

சென்ற நூற்றாண்டு முழுவதும் தங்கள் சிகரப்படைப்புகளாலும் அறிவுக்களஞ்சியங்களாலும் தமிழுக்கு அழகு சேர்த்த இலக்கியப் பெருமான்கள் பலர். அவர்களின் நூற்றாண்டு காணும் போது அவர்களுக்குச் சிறப்பு செய்யும் வகையில் ஆங்கிலத்தில் Reader என்று வெளிவருவது போல தமிழில் நினைவுத்தடம் வெளியிடும் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பேராசிரியர் க.அன்பழகன், கி. ராஜநாராயணன், கு. அழகிரிசாமி, தி. ஜானகிராமன், அழ. வள்ளியப்பா, கலைஞர் படைப்புலகம், தமிழ் ஒளி படைப்புலகம் வெளியாகி உள்ளன. தத்துவ மேதை, டி. கே. சீனிவாசன், ஏ.வி.சி.ஆசைத்தம்பி, புலியூர்க்கேசிகன், குன்றக்குடி அடிகளார், தொ. மு. சி. ரகுநாதன், ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் நினைவுத்தடங்கள் இந்த ஆண்டு வெளியாக உள்ளன.

**தமிழ்ப் பேரறிஞர் பெ.தூரன் தொகுத்த கலைக்களஞ்சியங்கள் - 20**

தமிழ்ப் பேரறிஞர் பெ.தூரன் அவர்களைக் கொண்டு வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள், குழந்தைகள் கலைக் களஞ்சியம் 10 தொகுதிகள் அரிய பொக்கிஷங்கள் ஆகும். அச்சில் இல்லாமல் இருந்தன. இவை தற்போது ஆவணப்பதிப்பாக வெளிவந்துள்ளன.

**செவ்வியல் இலக்கியங்கள் எளிய உரையுடன் - 16**

தமிழின் செவ்வியல் இலக்கியங்கள் என அறிவிக்கப்பட்டுள்ள 41 இலக்கியங்களும் மாணாக்கரும் மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் சந்தி பிரித்து எளிமையான உரையுடன் பதிப்பிக்கும் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறையுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. சென்ற ஆண்டு பத்துப்பாட்டில் இடம் பெறும் 16 நூல்கள் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த ஆண்டு குறுந்தொகை, பதிற்றுப்பத்து, களவியல் ஆகிய மூன்று நூல்கள் வெளியாகியுள்ளது.

**திராவிடக் களஞ்சியம்**

திராவிடக் கருத்தியல் சார்ந்த சிந்தனைகள், படைப்புகள் ஈராயிரம் ஆண்டுகள் தொன்மை கொண்டவை. இன்றைய திராவிட அடித்தளத்தைப் பின்னோக்கிப் பார்த்து ஆவணப்படுத்தும் முயற்சியாக அரசு திராவிடக் களஞ்சியம் திட்டத்தினை அறிவித்துள்ளது. தமிழ் வளர்ச்சித் துறையுடன் இணைந்து செயல்படுத்தப்படும் இத் திட்டத்தை செயல்படுத்த பேரா.வீ.அரசு அவர்களை முதன்மைப் பதிப்பாசிரியாகக் கொண்ட குழு 15 தொகுதிகளாக திராவிடக் களஞ்சியத்தைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

**உலக மொழிகளில் பெரியார் 21**

பெரியாரின் பகுத்தறிவு மெய்யியல் சிந்தனைகள் இன்றைக்கு உலக அளவில் பரவி வருகிறது. தந்தை பெரியாரின் சிந்தனைகள் இன்றைய உலகத் தேவைகளுக்குப் பொருத்தப்பாடாக இருப்பதே காரணம். இதனால் பெரியாரின் சிந்தனைகளை ஆங்கிலம் தவிர்த்த 21 இந்திய - உலக மொழிகளில் திட்டத்தின் முதல் கட்டமாக அவரது 5 நூல்கள் தேர்வு செய்யப்பட்டு 21மொழிகளில் வெளியாகியுள்ளது. இரண்டாம் பாகம் இந்த ஆண்டு 21 மொழிகளில் வெளியாக உள்ளது.

**சிறார்களுக்கு பிறமொழி இலக்கியம் - 74**

சிறார்களின் வாசிப்புத் திறனை விரிவுபடுத்தும் வகையில் உலகின் தலைசிறந்த உலக இலக்கியங்களைச் சிறார்களுக்கு ஏற்ப தமிழில் எழுதியும் இதேபோல பிற மொழிகளில் வெளியான சிறந்த சிறார் இலக்கியங்களை மொழியாக்கம் செய்தும் வெளியிட்டுள்ளோம். இதுவரை, 74 நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் மேலும்பல நூல்கள் வெளியாக உள்ளன.

**இந்திய ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதி**

இந்தோ ஐரோப்பிய மொழிகளின் வேர்ச் சொற்களை ஒப்பீட்டு ஆய்வு செய்து அகராதிப்படுத்தும் திட்டம் தமிழ் வளர்ச்சித் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு முதல் தொகுதி தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளில் வெளியாகியுள்ளன.

**தேன்சிட்டு, புது ஊஞ்சல், கனவு ஆசிரியர்**

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் இடைநிறுத்தப்பட்ட வகுப்பறைக் கல்வி மாணாக்கர் மத்தியிலும் சிறார் மனதிலும் ஏற்பட்டிருந்த உளவியல் அடிப்படையிலான பாதிப்பு திராவிட மாடல் அரசுக்குச் சவாலாக இருந்தது. ஏற்கனவே மதிப்பெண் அடிப்படையிலான கற்றல் செயல்பாடுகளால் சோர்வடைபவர்களையும் ஊக்கப்படுத்த வேண்டிய தேவை நமது கல்வி அமைப்பில் இருந்தது. இதையொட்டி எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளில் ஒன்று மாணாக்கருக்கான பருவ இதழ்கள் நடத்துவது. 3 5 வகுப்பு மாணாக்கருக்கு தேன்சிட்டு, 6 - 9 வகுப்பு மாணாக்கருக்கு புது ஊஞ்சல் என இரண்டு மாதமிரு முறை பருவ இதழ்கள் கொண்டுவரப்படும் என அரசு அறிவித்தது. வகுப்பறைக்கு ஒரு பிரதி என தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு பள்ளிகளில் உள்ள சுமார் 70 ஆயிரம் வகுப்பறைக்கு இந்த இரு இதழ்களும் விலையில்லாமல் அனுப்பப்படுகின்றன. தவிர ஆசிரியர்கள் புத்தாக்கத்திற்கும் கனவு ஆசிரியர் மாத இதழ் கொண்டுவரப்படுகிறது. இதற்கான ஆசிரியர் குழுவில் சிறார் இலக்கியம் மற்றும் இதழியலில் அனுபவம் கொண்ட எழுத்தாளர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளனர். அரசு பள்ளிகளுக்கு மட்டும் அனுப்பப்பட்டு வந்த இந்த இதழ்கள் முதல்வர் உத்தரவின் பேரின் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் அனுப்பப்படுகின்றன. மேலும் தனியார் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் பயனடையும் வகையில் சந்தா அடிப்படையில் அவர்கள் முகவரிக்கே அனுப்பப்படுகின்றன.

**சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சி**

உலகின் அரிய இலக்கண, இலக்கியங்களைப் படைத்தாலும் தமிழின் தொன்மையும் தொடர்பும் உலகம் அறியாமல் இருக்கிறது. இதேபோல உலக அறிவுச் செல்வமும் தமிழுக்கு அவசியமாக இருக்கிறது.

தமிழை உலகறியச் செய்வதும். உலகை தமிழ் அறியச்செய்வதும் எனும் நோக்கில் சென்னை பன்னாட்டு புத்தகக் கண்காட்சி கடந்த இரண்டு ஆண்டுகளாக பொது நூலக இயக்ககத்துடன் இணைந்து நடத்தப்படுகிறது.

நடப்பாண்டு பன்னாட்டு புத்தகக் காட்சியில் அமெரிக்கா, மலேசியா, துருக்கி, தான்சானியா, பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி உட்பட 60க்கும் மேலான நாடுகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள், எழுத்தாளர்கள் பங்கேற்றனர். மொத்தம் 78 அரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

2023ம் ஆண்டு 24 நாடுகள் பங்கேற்று 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், 2024ல் 40 நாடுகள் பங்கேற்று 752 ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. நடப்பாண்டு அந்த எண்ணிக்கை உயர்ந்து 1,125 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இதில் தமிழில் இருந்து அயலக மொழிகளுக்கு 1,005 ஒப்பந்தங்களும், அயலக மொழிகளில் இருந்து தமிழ் மொழிக்கு 120 ஒப்பந்தங்களும் போடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாதவாறு தமிழக பள்ளிக்கல்வித் துறையின் தனித்துவ முன்னெடுப்பான சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா புதிய மைல்கற்களை அடைந்துள்ளது. நமது எழுத்தாளர்கள் ஞானபீடம் அல்ல, நோபல் பரிசே பெற உயர்வுள்ளுவோம். இந்த வியத்தகு சாதனைக்காக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கும், துறை அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகள்" என்று முதல்வர் தெரிவித்துள்ளார்.

**100 இடங்களில் புத்தக நிலையங்கள்**

வெளியீட்டுப் பிரிவு நூல்கள் முதலமைச்சர் உத்தரவுக்கிணங்க அனைத்து மாவட்ட புத்தகக் காட்சிகளில் காட்சிப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றன. தலைமை நிலையத்திலும் பேராசிரியர் அன்பழகன் நினைவு புத்தக விற்பனை நிலையம் அரசால் தொடங்கப்பட்டுள்ளது. தவிர அரசு கல்லூரி நூலகங்கள், அறிவுசார் மையங்கள் ஆகியவற்றுக்கும் புத்தகங்கள் வழங்கப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில் சுமார் 3 கோடி ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனையாகி உள்ளன. லாப நோக்கின்றி விற்பனை செய்யப்படுவதால் வெளி புத்தகச் சந்தை மதிப்பில் இது சுமார் ரூ.7 முதல் ரூ.9 கோடி வரை ஆகும்.

வெளியீட்டுப் பிரிவு நூல்களை மேலும் கொண்டு சேர்க்கும் வகையில் மாநிலம் முழுவதும் 100 இடங்களில் புத்தக விற்பனை நிலையங்கள் திறக்கப்படும் என திராவிட மாடல் அரசு அறிவித்தது. இதன் தொடக்கம் மார்ச் 1 அன்று ஆசியாவின் பழைமையான புத்தக விற்பனை நிலையங்களில் ஒன்றான சென்னை ஹிக்கின்பாதம்ஸ் புத்தக விற்பனை நிலையத்தில் தொடங்கப்பட்டது.

இப்படி ஒவ்வொரு பணியாக ஆய்வு செய்து பார்க்கையில் இவை திராவிட மாடல் அரசின் இந்த முயற்சி ஒரு முன் மாதிரி செயல்பாடு என்பதில் ஐயமில்லை.